1971 ஜூலை 29]

these overdues should be brought down. Otherwise, these banks will not be eligible to receive any assistance or loan from the Reserve Bank of India.

வட ஆற்காடு மாவட்ட சவரத்தொழிலாளர் கூட்டுறவு சங்கம்

* 541 வின—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் சவரத் தொழிலாளர் கூட்டுறவு சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) மேற்படி சங்கத்திற்கு இதுவரை அரசு நிதி அளிக்கப் படவில்லை.

(உ) எழவில்லை.

திரு. மா. பா. சாரதி : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கம் சென்ற ஆண்டு பதிவு செய்யப்பட்டு பல முறை நிதி கோரி அரசாங்கத்திற்கு மனு செய்யப்பட்டும், அமைச்சர் அவர்களுடைய செயலாளர் நேரடியாக வந்தபோது அவரிடம் மனு கொடுக்கப் பட்டும், இதுவரைக்கும் அவர்களுக்கு நிதி கிடைத்ததாகத் தெரியவில்லை. அவர்களுக்கு நிதி கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தச் சங்கம் பதிவு செய்யப்பட்டது சென்ற ஆண்டு அல்ல. பதிவு செய்யப்பட்டது 1969-இல். அதற்குப் பிறகு, பிற்பட்டோர் நலனுக்காக ஒரு தனித் துறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இத்தகைய உதவிகளை அந்தத் துறை செய்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இதே மாதிரியாக திருநெல்வேலியில் ஓ. 2114 என்ற எண்ணில் 1965-இல் ஒரு க்ஷவரத் தொழிலாளர் சங்கம் ஏற்படுத்தப்பட்டு அதில் 100 பேர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கு வதற்காகக் கடன் கேட்டு, இதுவரை எந்தப் பலனும் கிடைக்கவில்லை. அவர்களுக்குக் கடன் கொடுத்துதவ அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இப்படிப்பட்ட சங்கங் களுக்கு பிற்பட்டவர்களுக்காக, க்ஷவரத் தொழிலாளர்களுக்காக, சலவைத் தொழிலாளர்களுக்காக கூட்டுறவுத் துறை மூலமாகக் கடன் கொடுப்பதால் என்ன கேடு வருகிறதென்றால், கடன் திரும்பி வருவதில்லை. அப்படிப் பணம் கொடுப்பதை உதவித் தொகையாகக் கொடுப்பது நல்லது என்று எண்ணி, பிற்பட்டோர் நலனுக்கென்று உள்ள துறை மூலமாக, மாண்புமிகு திரு. இராசாராம் மேற்பார்வை யில் அவர்களுக்கு முற்றிலும் மானியமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இப்படிப்பட்டவர்களுக்குக் கடன் கொடுத்தால் திருப்பி வரவில்லையென்று சொல்கிறார்கள். திருப்பிக் கொடுக்கக் கூடிய நிலையில் இருப்பவர்கள் கேட்டால், விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் தருவது போல, பிற்பட்டத் துறையில் உள்ள முடிதிருத்துபவர்களுக்கு நீண்ட காலக் கடன் தரப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கடன் கொடுக்கிற பிரச்னை எழவில்லை. கடன் கொடுத்தால் அதைத் திரும்பிப் பெறுவது சங்கடமாக இருக்கிறது. ஆகையினால் இப்படிப்பட்ட பின் தங்கியவர்களுக்கு கடன் கொடுப்பதற்குப் பதில், பிற்பட்டோர் நலத் துறை மூலமாக முற்றிலும் மானியமாகப் பணம் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்த பார்பர்ஸ் கோவாபரேடிவ் சொசைடி செயல்படுகிற செயல்முறைகளைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உறுப்பினர் அவர்கள் க்ஷவரத் தொழிலாளர்களுடைய கூட்டுறவுச் சங்கம் எப்படிச் செயல் படுகிறது என்று கேட்டார்கள். அது எப்படிச் செயல்படுகிறது என்று அவருக்கே தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, இந்த மாதிரி சங்கங்களெல்லாம் பதிவு செய்யப்படும்போது க்ஷவரத் தொழிலாளர் சங்கம், கலவைத் தொழிலாளர் சங்கம், செருப்பு தைக்கும் தொழிலாளர் சங்கம் என்ற பெயர்களை எடுத்துவிட்டு வேறு நல்ல பெயர் வைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நல்ல பெயர்கள் வைக்க முடியும். ஆனால் அவர்கள் எந்தப் பெயரால் சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்கிறார்களோ அந்தப் பெயரால்தான் நாம் செய்ய முடியும். க்ஷவரத் தொழிலாளி என்பதை முடி திருத்துவோர் கழகம் என்று மாற்றியமைக்க முடியும், நன்றாக இருக்கும். ஆனால் அவரவர்கள் விருப்பத்திற்கிணங்க செய்யப்படுகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இந்த பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள், பார்பர்கள், வாஷர்மென் போன்றவர்கள், கூட்டுறவு சொசைடி அமைப்பதற்கு அப்ளிகேஷன் போட்டால், அதை அரசாங்கம் ரெஜிஸ்டரே செய்வது கிடையாது. காரணமில்லாமல் காலதாமதம் செய்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1969-க்குப் பிறகு இப்படிப்பட்டவர்களுக்கென்று தனியாக ஒரு துறை ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமாகப் பல கோடி ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகையினால் 1969-க்குப் பிறகு இவ்வாறு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடன் கொடுப்பது என்பது அவ்வளவு சிறந்ததாக இல்லை. ஆகையினால் அப்படிப்பட்ட சங்கங்களை ஏற்படுத்துவதில் கால தாமதம் ஏற்படுகிறது.